**கவனிக்க** .- *2015.07.24 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1926 - 2015 ජූලි මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.07.30

*1926 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 520 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 522 |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 523 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 523 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 525 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** திருகோணமலை பன்குளம் மொறவெவ தெற்கு சிறிகஜபா கல்லென் ரஜமஹா விஹாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2015, யூன் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, ஓகத்து மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஓகத்து மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2015 இன் இல. 333*

*எம்ஓடி/டிஈஎப்/03/02/பீஆர்ஓ/ஆர்என்எப்/01/06.*

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்த்துதல்*

*2014, நவெம்பர் மாதம் 28 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கொமாண்டர் தரத்திற்கு :*

*லெப்டினன்ட் (தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர்) யமன் சபுகே சந்ர சுஜித் குமார, என்ஆர்எக்ஸ் 1664, இகப*

*2014, திசெம்பர் மாதம் 07 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கொமாண்டர் (இ) தரத்திற்கு :*

*லெப்டினன்ட் (இ) [தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (இ)] கபு ஆராச்சிகே திவங்க நிரோசான் சமறவீர, என்ஆர்ஈ 2207, இகப*

*2015, பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கொமாண்டர் (ச) தரத்திற்கு :*

*லெப்டினன்ட் (ச) [தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (ச)] றனசிங்ககே புஸ்பித றெசான், என்ஆர்எஸ் 2236, இகப*

*2015, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கொமாண்டர் தரத்திற்கு :*

*லெப்டினன்ட் [தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர்] மல்தெனியகே பத்ம சிறி தேசப்பிரிய மல்தெனிய, என்ஆர்எக்ஸ் 1797, இகப*

*2015, மாச்சு மாதம் 12 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கொமாண்டர் தரத்திற்கு :*

*லெப்டினன்ட் (தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர்) கஹேட்டபிடியகே மஞ்சுல பியசாந்த பெரேரா, என்ஆர்எக்ஸ் 1802, இகப*

*2015, மாச்சு மாதம் 26 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கொமாண்டர் தரத்திற்கு :*

*லெப்டினன்ட் (தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர்) தெடகமுவகே சசிக தனுஸ்க ஜயசேன, என்ஆர்எக்ஸ் 1782, இகப*

*2015, ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கொமாண்டர் தரத்திற்கு :*

*லெப்டினன்ட் (தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர்) நய்துவா வடு டெவேன் கோசல, என்ஆர்எக்ஸ் 1772, இகப*

*2015, ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கொமாண்டர் (இ) தரத்திற்கு :*

*லெப்டினன்ட் (இ) [தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர்) (இ)] சந்திம ஏகநாயக, என்ஆர்ஈ 1751, இகப*

*லெப்டினன்ட் (இ) [தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர்) (இ)] விஜயவர்தன படபெந்தலாகே பிரதீப் குமார விஜயரத்ன, என்ஆர்ஈ 1765, இகப*

*லெப்டினன்ட் (இ) [தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர்) (இ)] முனகமகே நெஹாத் ஹெட்டிகே விஹார திநேஸ், என்ஆர்ஈ 1795, இகப*

*லெப்டினன்ட் (இ) [தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (இ)] வதல வத்தகே மஞ்சுல பிரபாத் விமலரத்ன, என்ஆர்ஈ 1796, இகப*

*2015, ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கொமாண்டர் (வி) தரத்திற்கு :*

*லெப்டினன்ட் (வி) [தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (வி)] மலவர கங்கானமலாகே காவிந்த சரித் பெமறத்ன, என்ஆர்எல் 1764, இகப*

*லெப்டினன்ட் (வி) [தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (வி)] கங்கானி கெதர ஜனக பிரசன்ன றனதுங்க, என்ஆர்எல் 1788, இகப*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*பீ. எம். யூ. டீ. பஸ்நாயக்க,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு அமைச்சு.*

*பாதுகாப்பு அமைச்சு,*
*கொழும்பு,*
*2015, யூன் 17.*

*7-1308/3*

---

*2015 இன் இல. 334*

*எம்ஓடி/டிஈஎப்/03/02/பீஆர்ஓ/ஆர்என்எப்/01/06.*

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்த்துதல்*

*2015, சனவரி மாதம் 15 ஆந் திகதியிலிருந்து வைத்தியர் லெப்டினன்ட் கமாண்டர் தரத்திற்கு :*

*வைத்தியர் லெப்டினன்ட் மடவல கங்கானம்கே அனுருத்த உதேசிக, என்ஆர்எம் 2407, இகப*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*பீ. எம். யூ. டீ. பஸ்நாயக்க,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு அமைச்சு.*

*பாதுகாப்பு அமைச்சு,*
*கொழும்பு,*
*2015, யூன் 17.*

*7-1308/1*

*2015 இன் இல. 335*

எம்ஓடி/டிஈஎப்/03/02/ஆர்ஓ/ஆர்என்எப்/01/06(iv).

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்த்துதல்

*2015, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (இ) தரத்திற்கு :*

*லெப்டினன்ட் (இ) இமதுவ விக்ரம ஆரச்சிகே நுவன் சிறி மதுசங்க, என்ஆர்ஈ 2318, இகப*

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பீ. எம். யூ. டீ. பஸ்நாயக்க,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2015, யூன் 17.

7-1308/4

---

*2015 இன் இல. 336*

எம்ஓடி/டிஈஎப்/03/02/பீஆர்ஓ/ஆர்என்எப்/01/06.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்த்துதல்

*2015, மாச்சு மாதம் 26 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் தரத்திற்கு :*

லெப்டினன்ட் அன்சார் முஹம்மட் பயிசால், என்ஆர்எக்ஸ் 2343, இகப

*2015, ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (இ) தரத்திற்கு :*

லெப்டினன்ட் (இ) ஏகனாயக முதியன்செலாகே புத்திக பிரசன்ன ஏகநாயக, என்ஆர்ஈ 2334, இகப

*2015 ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (இ) தரத்திற்கு :*

லெப்டினன்ட் (இ) சுபசிங்ஹ ஆரச்சிகே நவீன் பிரசாத் கருனாரத்ன, என்ஆர்ஈ 2328, இகப

*2015, மே மாதம் 02 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் தரத்திற்கு :*

லெப்டினன்ட் வீரசேகரகே தனஞ்ஜய தீபால் ரெத்ரிகு, என்ஆர்எக்ஸ் 2250, இகப

*2015, மே மாதம் 02 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (வியாப) தரத்திற்கு :*

லெப்டினன்ட் (வியாப) திஸாநாயக ஆரச்சிகே பியந்த புஸ்பகுமார, என்ஆர்இசட் 2276, இகப

*2015, மே மாதம் 07 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (இ) தரத்திற்கு :*

லெப்டினன்ட் (இ) களுஅப்பு கங்கானமலாகே தேன்மலின்திலங்க கருணாரத்ன, என்ஆர்ஈ 2320, இகப

லெப்டினன்ட் (இ) சுபசிங்க பதிரனலாகே யாபா தேன் ஜகத் சுபசிங்ஹ, என்ஆர்ஈ 2331, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பீ. எம். யூ. டீ. பஸ்நாயக்க,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2015, யூன் 17.

7-1308/2

---

*2015 இன் இல. 337*

டி/ஏஎப்/31/2.

**இலங்கை விமானப்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நியமனம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை விமானப் படையின் இளநிலைப் பயிலுநர் உத்தியோகத்தர்களை 2008, செத்தெம்பர் 24 ஆந் திகதி முதல் செயற்படும் வண்ணம் பைலட் உத்தியோகத்தர்களாக நியமிப்பதற்கும் அதே தினம் முதல் செயற்படும் வண்ணம் சேவைக் கிளைகளுக்கு இடுகையிடுவதற்கும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது :-

11520 இளநிலைப் பயிலுநர் விஜேகோன் முதியன்சலாகே சானக ஹர்ச் பண்டார, வழங்கல்
11521 இளநிலைப் பயிலுநர் வீரகோன் முதியன்சேலாகே மோகீத் சதுரங்க வீரகோன், பி.பொ.க.
11522 இளநிலைப் பயிலுநர் பிரகீத் கெமும் கமகே, வழங்கல்
11524 இளநிலைப் பயிலுநர் நிமேஷ் கசுன் அபேவர்தன, தொ/பொறி

11525 இளநிலைப் பயிலுநர் பென்தொட சமித் கமகே, தொ/பொறி
11526 இளநிலைப் பயிலுநர் காரியவசம் மாதின்ன கமகே லக்மல், தொ/பொறி
11528 இளநிலைப் பயிலுநர் குகுலே வியன்னலாகே நிரூதக திலகரத்ன, தொ/பொறி
11529 இளநிலைப் பயிலுநர் விதானகே நுவன் இந்தீவர யாழகம, தொ/பொறி

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2010, பெப்புருவரி 23.

7-1561

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2015 இன் இல. 338

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது

இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திருமதி சாந்தனி விஜேவர்தன அவர்கள் 2013, நவெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதியாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

7-1369/1

2015 இன் இல. 339

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது

இலங்கை கணக்காளர் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. எம். எஸ். டீ. ரணசிறி அவர்கள் 2014, யூன் மாதம் 28 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதியாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

7-1369/2

2015 இன் இல. 340

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. அனுராத விஜேகோன் அவர்கள் 2015, சனவரி மாதம் 21 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளராக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

7-1369/3

2015 இன் இல. 341

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது

இலங்கை நிருவாக சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த திரு. டீ. ஏ. எல். நிமல் அவர்கள் 2015, மாச்சு மாதம் 16 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை பதுளை நிருவாக மாவட்டத்தின் பதில்மாவட்டச் செயலாளராக/அரசாங்க அதிபராக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

7-1369/4

*2015 இன் இல. 342*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. ஆர். எம். பி.ரத்நாயக்கா அவர்கள் 2015, ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதியாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

7-1369/5

---

## மற்றைய நியமனங்களும் பிறவும்

*2015 இன் இல. 343*

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

வகுப்புக்கு இடையில் மாற்றுதல்

கீழ்க் காணப்படும் பெயருடைய அதிகாரி 2015, யூன் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து தரத்தில் வேறுபாடு இன்றி அதிகாரப் பிரிவில் இருந்து ஒழுக்கவியல் பிரிவுக்கு வகுப்புக்கு இடையில் மாற்றப்படுவதோடு அவரது பெயர் தரம் மற்றும் இலக்கம் கீழ் காட்டப்பட்டுள்ளது:-

பதில் உப லெப்டினன்ட் (விஆ) நாராயன முதியன்செலாகே சுரேஸ் அரவிந்த திஸாநாயக, என்ஆர்ஆர் 3243 இகப

எஸ் ஏ எம் ஜே பெரேரா,
ஆர்டப்ளியூபீ, வீஎஸ்வீ, யுஎஸ்பீ, என்டீசீ, பீஎஸ்சீ,
வயிஸ் அத்மிரால்,
கடற்படை தளபதி.

கொழும்பு,
2015, யூன் 08.

7-1481

---

## அரசாங்க அறிவித்தல்கள்

**காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (120 ஆம் அத்தியாயம்)**
**கீழான அறிவித்தல்**

கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் இரண்டாவது நிரலில் குறிப்பிடப்படும் காணி மற்றும் மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் உறுதிகளுக்குரிய முதலாவது நிரலில் காணப்படும் தற்பொழுது சிதைவடைந்து அல்லது கிழிந்துபோயுள்ள காணியினை பதிவு செய்த புத்தகம்/ஏடு மீண்டும் பூரணமாக தற்காலிகமாக தயாரிக்கப்பட்டுள்ளதனால் காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (120 ஆம் அத்தியாயம்) 4 ஆவது பிரிவிற்கிணங்க இத்தால் அறிவிக்கின்றேன்.

2. 2015.07.31 ஆந் திகதி தொடக்கம் 2015.08.14 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் எந்தவொரு நபருக்கும் மேற்குறிப்பிடப்பட்ட தற்காலிக ஏட்டினை தெல்கந்தை காணிப் பதிவகத்தில் பரிசீலனை செய்து பார்க்க முடியும்.

3. அத்தற்காலிக ஏட்டில் எதுவிதமான அல்லது அதன் குறிப்பில் அடங்கியுள்ள எந்தவொரு விடயம் தொடர்பாக எந்தவிதமான ஆட்சேபனையினை வெளிப்படுத்துவதற்கு விரும்பும் நபர் அல்லது ஏதாவது குறிப்பு அல்லது ஏதாவது குறிப்பினால் விடப்பட்டிருக்கும் விடயத்தினை சேர்ப்பதற்கு வேண்டுகோளினை சமர்ப்பிக்கும் நபர் அந்த ஆட்சேபனையினை அல்லது வேண்டுகோள் அடங்கிய கடிதத்தினை விபரத்துடனும் தெளிவாக அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடனும் 2015.08.21 ஆந் திகதிக்கு முன்பதாக இங்கு கீழ் கையொப்பம் இட்டவருக்கு கிடைக்கக்கூடியதாக பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**அட்டவணை**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள்* | *காணியின் விபரம்* | *பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள்* |
| 1. கொழும்பு மாவட்டத்தின் தெல்கந்தை காணிப் பதிவகத்தில் M என்னும் பிரிவில் 1325 ஆவது புத்தகத்தில் 73 வது ஏடு. | மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தின் பல்லேபற்று சல்பிட்டி கோறளையில் ராணவணாவத்தையில் அமைந்துள்ள "மிட்டியவத்த" என்னும் இடத்திற்கான எல்லைகள்:-<br>வடக்கு : சித்தலன் தலுவ தோணிப் பாதைக்கு செல்லும் பாதை;<br>கிழக்கு : ஜுவன் சில்வாவிற்கு சொந்தமாகவிருந்து தற்பொழுது ஹெரி சொய்சாவிற்குரிய காணி ;<br>தெற்கு : முன்னர் ஜுவன் சில்வாவிற்கு சொந்தமாக இருந்த காணி மற்றும் கே. அல்விஸ் பெரேராவிற்கு உரித்தான இந்த காணியின் பகுதி;<br>மேற்கு : எம். ஜுவன் பர்னாந்துவின் காணி மற்றும் கே. அல்விஸ் பெரேராவிற்கு உரித்தான இந்த காணியின் பகுதி.<br><br>விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 233/4பே. | 1. இலக்கம் 1690 நிதி உடைய வழக்கு தீர்ப்பின் பிரகாரம் 2645 இலக்கமுடைய ஈட்டு இரத்து செய்தல் |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல. : ஆர்ஜீ/என்பி/11/2/27/2015/ஏடு. தயாரித்தல்
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

7-1498

---

## மட்/மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் - 2015

மட்/மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் 2015.08.09 ஆந் திகதி இரவு 8.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து 2015.08.29 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெற்று, அன்றைய தினம் இரவு 9.00 மணிக்கு கொடி இறக்கத்துடன் இந்நிகழ்வு நிறைவுபெறும்.

27.05.1949 ஆந் திகதிய 5886 ஆம் இலக்க அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட விதிகள் உற்சவக் காலத்தில் அமுலில் இருக்கும் என்பதை பொதுமக்களின் தகவலுக்காக அறியத்தருகிறேன்.

என். வில்வரத்னம்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
போரதீவுபற்று,
வெல்லாவெளி.

7- 1283

---

ச. வ. பீ. 89/48III

## தபால் தந்தி நலன்புரி சங்கம்

(286 ஆம் அத்தியாயமான) தபால் தந்தி நலன்புரிச் சங்கக் கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் தபால் தந்தி நலன்புரிச் சங்கத்தால் ஆக்கப்பட்டு அப்பிரிவால் நிதி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் பயனைக் கொண்டு அவரால் உறுதிப்படுத்தப்பட்ட விதிகள்.

அப்துல் மஜீத்,
செயலாளர்,
அஞ்சல் சேவைகள் அமைச்சு.

அஞ்சல் தலைமையகம்,
310, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 01000.
2015, யூன் 29.

**விதிகள்**

1949 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதிய 9936ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு காலத்திற்குக் காலம்

திருத்தப்பட்ட தபால் தந்தி நலன்புரி சங்கத்தின் விதிகள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றன:-

**I ஆம் அத்தியாயம் - பொது விதிகள்**

II (i) ஆ ஆம் விதி பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

உறுப்பினரொருவரின் மரணத்தின் போது கூட்டுத்தாபன நிதியத்திலிருந்து இருபத்தையாயிரம் ரூபா (ரூபா 25,000) ஐ மரண அளிப்பாக செலுத்துதல் வேண்டும். மரணித்தவரினால் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய ஏதேனும் பணம் இருப்பின் அவ்வளிப்பிலிருந்து கழித்துக் கொண்டு மிகுதி பணத்தைச் செலுத்த வேண்டும்.

**VI ஆம் அத்தியாயம் - உறுப்பினரின் தங்கியிருப்போரிற்கான மரண உதவி பிரேரணை திட்டம்**

இல. (V) இன் கீழ் கீழே காட்டப்பட்டுள்ளவாறு புதிய விதியை உட்சேர்க்கவும் :-

V கூட்டுத்தாபன சேவையிலுள்ள பணியாட்தொகுதி உரிய உறுப்புரிமை கட்டணங்களை செலுத்துவதினால் II ஆம் பிரிவுடன் சேர்த்து இப்பிரேரணை திட்டத்தினால் பயன்பெற முடியும்.

VII ஆம் அத்தியாயம் - விசேட பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான கடன்

(1) ஆம் மற்றும் (3) ஆம் விதிகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-

(2) விதியில் "ஐம்பதினாயிரம் ரூபா (ரூபா 50,000) என்பதை நீக்கிவிட்டு "ஒரு இலட்சம் ரூபா (ரூபா 1,00,000)" என்பதை பதிலிடவும்,

(2) விதியில் "ரூபா 50,000" என்பதை நீக்கிவிட்டு ரூபா 1,00,000 என்பதை பதிலிடவும்'

**VIII ஆம் அத்தியாயம் - பண்டிகை முற்பணக் கடன்**

(1) ஆம் மற்றும் (2) ஆம் விதிகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-

(1) விதியில் "ரூபா 10,000" என்பதை நீக்கிவிட்டு "ஐம்பதாயிரம் ரூபா (ரூபா 50,000)" என்பதை பதிலிடவும்,

(2) விதியில் "பண்டிகை முற்பணக் கடன் தொகை 10 சம தவணைகளில் மீள அறவிடப்பட வேண்டும் மாதாந்த தவணைக்கு மேலதிகமாக மாதாந்த தவணையின் 10% தொகையை சேவைக் கட்டணமாக அறவிடல் வேண்டும்" என திருத்தப்படுகின்றது.

**IX ஆம் அத்தியாயம் - நலன்புரி நிதியம்**

3.(அ) ஆம் விதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை பதிலிடவும்.

(ஆ) அம்மாணவர்களின் 10 பேர் அவ்வருடத்தின் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஆகக்கூடிய Z புள்ளிகளின் மதிப்பீட்டின் மீது வரிசை கிரமத்தில் தேர்ந்தெடுத்தல்.

(இ) விதியை நீக்கிவிட்டு 3(ஈ) எனும் விதியை 3(இ) விதியாக மீண்டும் பெயரிடுக.

7-1310

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கியின் பிஎல்ச ீ பணிப்பாளர் சபையினால் 2015, பெப்புருவரி 27 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"இஹல பியன்வலவைச் சேர்ந்த யத்தஹிகே டென்சன் டி சில்வா மற்றும் நிமாலி அமரநாயக்க தனபால என்போர், (முன்னர் டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி லிமிட்டெட் எனவறியப்பட்ட) டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீ சார்பில் முறையே பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். பீ. சில்வா, பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். குணரத்ன மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஏ. எஸ். கனேகொட என்போரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2009, திசெம்பர் 17, 2010, சனவரி 6 மற்றும் 2010, சனவரி 8 ஆகிய தேதிகளை உடையதும் 796/2020/1236 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான ஈட்டுமுறிமீதும், முறையே பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். பீ. சில்வா, பிரசித்த நொத்தாரிசு எஸ். வலத்தர மற்றும் பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். குணரத்ன என்போரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், 2010, யூன் 9, 2010, யூலை 7 மற்றும் 2010, யூலை 12 ஆகிய திகதிகளை உடையதும் 943/1701/2087 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான ஈட்டுமுறி மீதும் முறையே பிரசித்த நொத்தாரிசு எஸ்.எம். பீ. சில்வா, பிரசித்த நொத்தாரிசு சீ. பீ. டபிள்யூ. மீகஹாவெல பிரசித்த நொத்தாரிசு எஸ். பஸ்நாயக்க என்போரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2011, செத்தெம்பர் 22, 2011, நவெம்பர் 15 மற்றும் 2011, நவெம்பர் 18 ஆந் திகதிகளை உடையதும் 1351/129/113 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான ஈட்டுமுறி மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளை செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலாலும்,

அத்துடன் 2014, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக மேற்சொல்லப்பட்ட 796/2020/1236, 943/1701/2087 மற்றும் 1351/129/113 ஆம் இலக்க ஈட்டு முறிகள் மீது ஒரு கோடியே ஆறு இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து இருநூற்று நாற்பத்திரண்டு ரூபா எழுபத்தொரு சதம் (ரூ. 1,06,83,242.71) கொண்ட தொகையும், 2014, நவெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு அதன்மீது இருபத்து நான்கு சதவீத (24%) மேலதிக வட்டியும் அத்துடன் இருபத்தொன்பது இலட்சத்து பத்தொன்பதாயிரத்து அறுநூற்றுதொண்ணூற்று எட்டு ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 29,19,698.59) கொண்ட தொகையும், 2014, நவெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை இருபத்து மூன்று இலட்சத்து ஏழாயிரத்து முந்நூற்று பதின்மூன்று ரூபா எண்பத்திரண்டு சதம் (ரூ. 2307,313.82) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்

களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவி) ஆண்டொன்றுக்கு ஒன்பது தசம் ஏழு மூன்று சதவீதத்தில் (9.73%) அதன்மீது கணக்கிடப்பட்ட மேலதிக வட்டியும் சொல்லப்பட்ட யத்தஹிகே டென்சன் டி சில்வா மற்றும் நிமாலி அமரநாயக்க தனபால என்போரிடமிருந்து டீ.எவ்.சீ.சீ. வர்தன வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 796/2020/1236, 943/1701/2087 மற்றும் 1351/129/113 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்படும் காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத் தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஒரு கோடியே ஆறு இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து இருநூற்று நாற்பத்திரண்டு ரூபா எழுபத்தொரு சதம் (ரூ. 1,06,83,242.71) கொண்ட தொகையையும், 2014, நவெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதியை ஆண்டொன்றுக்கு அதன் மீது இருபத்துநான்கு சதவீத (24%) மேலதிக வட்டியையும் அத்துடன் இருபத்தொன்பது இலட்சத்து பத்தொன்பதாயிரத்து அறுநூற்றுதொண்ணூற்று எட்டு ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 29,19,698.59) கொண்ட தொகையையும் 2014, நவெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை இருபத்து மூன்று இலட்சத்து ஏழாயிரத்து முந்நூற்று பதின்மூன்று ரூபா எண்பத்திரண்டு சதம் (ரூ. 23,07,313.82) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவி) ஆண்டொன்றுக்கு ஒன்பது தசம் ஏழு மூன்று சதவீதத்தில் (9.73%) அதன்மீது கணக்கிடப்பட்ட மேலதிக வட்டியையும், அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப் படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் அறவிடுவதற்காக மேற்சொல்லப்பட்ட 796/2020/1236, 943/1701/2087 மற்றும் 1351/129/113 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் சொல்லப்பட்ட யத்தஹிகேடென்சன் டி சில்வா என்பவரினால் முன்னர் டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொல்லப்பட்ட காணியும் கட்டிடங்களும் அதன்மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### 796/2020/1236, 943/1701/2087 மற்றும் 1351/129/113 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டத்தில் வெல்லவாய கோறளையில் திம்புலமுரேயில் அமைந்துள்ளதும்,அதன்மீதுள்ள மண், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வேறொல்லாவற்றுடனும் திம்புலமுரேகணத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். டபிள்யூ. முனசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட1987.10.21 ஆந் திகதிய 2152 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டங்கள் 18 மற்றும் 19 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அணித்தாயுள்ள அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டங்கள் 18 மற்றும் 19 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : 2152 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டங்கள் 17 மற்றும் 20 ; கிழக்கு : காணித்துண்டங்கள் 45 மற்றும் 46 (20 அடி அகலமான வீதி) ; தெற்கு: காணித்துண்டங்கள் 45 மற்றும் 46 (20 அடி அகலமான வீதி) மற்றும் ; மேற்கு : கி. ச. வீதி; பரப்பளவில் இது, ஒரு றூட் பத்துப் பேர்ச்சு (0ஏ. 1றூ. 10பே.) கொண்டுள்ளதுடன், மொனராகலைக் காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் 79/102 இன்கீழ் பதிவு செய்யப்பட்டு முள்ளது.

மிகக் கிட்டிய நிலஅளவையின்படி மேற்கூறப்பட்ட காணித்துண்டு பின்ருமாறு விவரிக்கப்படுகின்றது :-

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டத்தில் வெல்லவாய கோறளையில் திம்புலமுரேயில் அமைந்துள்ளதும்,அதன்மீதுள்ள மண், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வேறொல்லாவற்றுடனும் திம்புலமுரேகணத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். கே. குணசேகர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.05.29 ஆந்திகதிய 5014 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அணித்தாயுள்ள அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டு 1 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். எம். முனசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2152 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டங்கள் 17 மற்றும் 20 ; கிழக்கு : வீதி; தெற்கு : வீதி மற்றும் ; மேற்கு : வீதி ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 5014 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு றூட் பத்துப் பேர்ச்சுக்களை (0ஏ. 1றூ. 10பே.) அல்லது சைபர் தசம் ஒன்று இரண்டு ஆறு ஐந்து 0.1265 ஹெக். கொண்டுள்ளது.

லக்ஷ்மன் சில்வா,
பிரதம நிறைவேற்றலுவலர்.

டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீ,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

7-1325

---

### இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2015.06.10 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. ''பிரசித்த நொத்தாரிசு ஜே. எம். பீ. டபிள்யூ. திலகரத்ன அத்தாட்சிப்படுத்திய 2011, திசெம்பர் 27 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 2066 இன் பேரில் வத்தளை, பழைய நீர்கொழும்பு வீதி, சென்ட்

அந்தனீஸ் மாவத்தை, இல. 118/36 என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் உருத்திரா ஏஜன்சியிடமிருந்து (பங்குதாரர்கள், கொழும்பு 04, எலிபெந்தலி ஒழுங்கை, இல.03 ஐச் சேர்ந்த திரு. ராஜலிங்கம் சந்திரசேகரம் மற்றும் திருமதி லோகேஸ்வரி சந்திரசேகரம்) முதலாம் கடன் மீது 25.03.2015 வரை முதலும் வட்டியும் ஒரு கோடியே எழுபத்தேழு இலட்சத்து பத்தாயிரத்து இருநூற்று ஐம்பத்தேழு ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூ. 1,77,10,257.69) அத்துடன் ஒரு கோடியே ஐம்பத்துநான்கு இலட்சத்து ஒன்பதாயிரம் ரூபா (ரூ. 1,54,09,000) ஆண்டுக்கு பதினொன்று தசம் இரண்டு ஐந்து (11.25%) வீதத்தில் 26.03.2015 தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் இரண்டாவது கடன் மீது 25.03.2015 வரை முதலும் வட்டியும் நாற்பத்துநான்கு இலட்சத்து இருபத்தோராயிரத்து முந்நூற்று ஐம்பது ரூபா இருபது சதம் (ரூ. 44,21,350.20) அத்துடன் முப்பத்தாறு இலட்சத்து எழுபத்தையாயிரதம் ரூபா (ரூ. 36,75,000) ஆண்டுக்கு பதின்மூன்று (13%) வீதத்தில் 26.03.2015 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. 2011.12.27 ஆந் திகதியிட்ட மேற்குறிப்பிட்ட முறி இலக்கம் 2066 இன் பேரில் 01 வது கடன் மீது ஒரு கோடியே எழுபத்தேழு இலட்சத்து பத்தாயிரத்து இருநூற்று ஐம்பத்தேழு ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூ. 1,77,10,257.69) 2 ஆவது கடன் மீது நாற்பத்துநான்கு இலட்சத்து இருபத்தோராயிரத்து முந்நூற்று ஐம்பது ரூபா இருபது சதம் (ரூ. 44,21,350.20) அத்துடன் 26.03.2015 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹாரை மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுகளுக்கமையவும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி வெள்ளவத்தை கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகிறது.''.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அளுத்குரு கோறளை ராகம் பற்றுவில் வத்தளை, மாபோல பட்டின சபை எல்லைகளுள் வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் 179 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் குடா ஏதன்டவில் நீர்கொழும்பு வீதியில் அமைந்த ''கஹட்டகஹவத்த மில்லகஹவத்த தெல்கஹவத்த மற்றும் கஹட்டகஹஓவிட்ட'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. சிவசுந்தரம் தயாரித்த 1977, செத்தெம்பர் 20 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1043F இல் விபரித்த துண்டு $1^5$ என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. சிவசுந்தரம் தயாரித்த 1971, பெப்புருவரி 10 ஆந் திகதியிட்ட வரைபடம் இல.1043 இல் துண்டு A (பாதைக்கு ஒதுக்கப்பட்டது); கிழக்கு : வரைபடம் இல. 1043 இல் துண்டு H உம் ; தெற்கு : வரிமதிப்பிலக்கங்கள் 38/2 மற்றும் 42 (K.E. R.) கொண்ட நிலமனை; மேற்கு : துண்டுகள் 13 உம், 14 உம் எல்லைளாகக் கொண்டு ஒரு றூட் பத்து தசம் சைபர் ஒன்பது பேர்ச் (1ஏ. 0றூ. 10.09பே.) விஸ்தீரணமுடையது. இக் காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் B 776/113 இல் பதிவு செய்யப்பட்டது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. சந்திரசேன தயாரித்த 1994, ஓகத்து 27 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல.167/94 இன் பிரகாரம் மேற்குறிப்பிட்ட காணி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

